4th August 1966]

திரு. மீ. கலியாணசுந்தரம்: இவ்வளவு பெரிய நகரத்தில் இன்னும் ஒரு பஸ் ஸ்டாண்ட் வசதி கூட இல்லாமல் இருப்பது அங்குள்ள மக்களுக்குக் கஷ்டத்தை அளிக்கக் கூடியதாக இருக்கிற காரணத்தினால் நம் அமைச்சர் அவர்கள், அதுவும் ரெயில்வே அமைச்சர் அவர்களிடம் செல்வாக்குள்ள நமது முதல் அமைச்சர் அவர்கள், அவர்களது செல்வாக்கைப் பயன்படுத்தி அந்த நிலத்தைச் சீக்கிரம் முனிசிபாலிட்டிக்குக் கொடுக்க நடவடிக்கைகள் எடுப்பார்களா ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: ஏற்கெனவே டிபன்ஸ் டிப்பார்ட்மென்ட், ரெயில்வே டிப்பார்ட்மென்ட்டுக்கு அந்த நிலத்தை மாறுதல் செய்ய காலதாமதம் ஏற்பட்டதைக் கனம் அங்கத்தினர் அறிவார்கள். கடைசியாக விலைக்குத் தர ஒப்புக்கொண்டு விட்டார்கள். விலைக்குத் தருவதில் சதுர அடிக்கு ஒரு ரூபாய் என்று கலெக்டர் நிர்ணயித்தார்கள். அவர்கள் இரண்டு ரூபாய் கேட்கிறார்கள். அதில் சீக்கிரமாக முடிவு எடுக்கப்படும்.

திரு. மீ. கலியாணசுந்தரம்: விலையைப்பற்றி எப்படி வேண்டுமானாலும் நிர்ணயித்துக் கொள்ளலாம். இன்னொரு நாட்டுக்கு நாம் கொடுக்கவில்லை. ஒரு ரூபாயாக இருந்தாலும் சரி, இரண்டு ரூபாயாக இருந்தாலும் சரி, முதலில் நிலத்தை ஒப்படைத்து விடட்டும் முனிசிப்பாலிட்டியிடம். அப்புறம் விலையை எப்படி பைசல் செய்கிறார்களோ அதைப் பெற்றுக்கொள்ளட்டும். ஆகவே, அதற்கான நடவடிக்கைகளை துரிதமாக எடுப்பார்களா ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: அங்கத்தினர் அவர்கள் கருத்தைக் கலெக்டரிடம் தெரியப்படுத்தி துரிதமாக நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

அரக்கோணம் நகரசபைக்குச் சொந்தமான நிலம்

* 100 கேள்வி.—திரு. எஸ். ஜே. ராமசாமி: கனம் தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) அரக்கோணம் நகரசபைக்குச் சொந்தமான சர்வே நெ. 180-ல் அமைந்துள்ள புறம்போக்கு நிலத்தை அரக்கோணம் நகரசபை மெம்பர் ஒருவர் சொந்தமாக்கிக் கொண்டது பற்றி 10—1—1966-ல் வடார்க்காடு மாவட்டக் கலெக்டருக்கு புகார் ஏதேனும் கொடுக்கப்பட்டதா ?

(இ) ஆமெனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: (அ) ஆம்.

(இ) இது குறித்து முடிவு செய்யப்படுகிற வரையில், இந்த நிலத்தில் மேலும் கட்டடங்கள் கட்டும் வேலையை நிறுத்திவைக்கும்படி, அரக்கோணம் நகரசபைக் கமிஷனருக்கு உத்தரவு பிறப்பித்திருப்பதாக வட ஆற்காடு மாவட்டக் கலெக்டர் தெரிவித்துள்ளார்.

[4th August 1966

திரு. எஸ். ஜே. ராமசாமி: அந்த நிலம் புறம்போக்கு நிலம் வீட்டுக்குப் பக்கத்தில் இருக்கிறது. வீட்டோடு சேர்த்து சுவர் கட்டிக் கொண்டார்கள் என்று அங்குள்ள நகரசபை உறுப்பினர் ஒருவர் கூட ரிப்போர்ட் செய்தார், சரியான விசாரணை செய்யப்படவில்லை. அமைச்சர் அவர்கள் நேரடியாக இதை விசாரித்து அந்தப் புறம்போக்கு நிலம் சர்க்காருக்குச் சேர ஆவன செய்வார்களா?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: அது புறம்போக்கு நிலம் அல்ல. முன்பிருந்த பஞ்சாயத்து போர்ட் விலைக்கு வாங்கியது. ஆகவே யார் வந்து ஆக்கிரமிப்பு செய்தாலும் விட்டுவிட முடியாது. ஐந்து பேர்கள் என்க்ரோச் செய்திருக்கிறார்கள். ஒருவர் மனு வந்தது. கலெக்டர் ஏற்கனவே விசாரணை நடத்தியிருக்கிறார்கள். தகுந்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

9-30 a.m. திரு. தா. சின்னசாமி: தலைவர் அவர்களே, அரிசனங்கள் குடியிருக்கும்படியான வசதிகளை ஏற்படுத்திக்கொள்வதற்காக புறம்போக்கு நிலங்களை பஞ்சாயத்துக்கள் வேண்டும் என்று கேட்டிருந்தும்.

கனம் சபாநாயகர்: இந்தக் கேள்வி அரக்கோணம் முனிசிபாலிட்டியைப் பற்றியது.

கேள்விகள் முடிவடைந்தன.

[*Note.*—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

II—CALLING ATTENTION TO NON-LETTING OUT OF WATER FROM METTUR RESERVOIR

திரு. து. ப. அழகமுத்து: கனம் சபாநாயகர் அவர்களே, மேட்டூர் நீர்த்தேக்கத்திலிருந்து தண்ணீர் விடப்படாமையால் குறுவைச் சாகுபடி சம்பந்தமாகத் தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி மாவட்டங்களில் நிலவும் இடர்பாடான நிலை குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த விஷயத்தைக் கனம் உணவு அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

THE HON. SRI V. RAMAIAH: Mr. Speaker, Sir, the normal opening date of the Mettur Reservoir is 12th June, provided the storage and level on that day are 20,000 M. cft. and 53.38 feet respectively. The storage and level of the Mettur Reservoir on the 12th June this year were 8,364 M. cft. and 32.06 feet respectively. As the available storage was inadequate and as the Southwest monsoon had not set in till then, the reservoir could not be opened for irrigation. The position was explained to the Delta ryots by a press note, dated 7th June 1966. It was also stated therein that the position would continue to be watched, and water for irrigation would be released no sooner than adequate storage is built.

The storage position of the Mettur Reservoir and its opening for irrigation were subsequently reviewed at frequent intervals by the Government. Even in the first fortnight of July, there was a